நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மலர் சாகுபடியாளர்களுக்கு உதகையில் பயிற்சி முகாம்**

First Published : 11 Dec 2011 10:35:58 AM IST

உதகை, டிச. 10: உதகையில் காரனேசன் மலர் சாகுபடிக்கான அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் குறித்த ஒருநாள் பயிற்சி முகாம் நடைபெற்றது.

÷உதகை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமில், காரனேசன் மலர் சாகுபடியில் ஈடுபட்டுள்ள 35 மலர் சாகுபடியாளர்கள் பங்கேற்றனர். பயிற்சி முகாமை கோவை வேளாண்மை பல்கலைக்கழக மேலாண் குழு உறுப்பினர் ஆர்.அர்ச்சுணன் தொடங்கி வைத்தார்.

÷அப்போது அவர் பேசுகையில், நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்கமும் தோட்டக்கலைத் துறையும் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையமும் இணைந்து காரனேசன் உற்பத்தி நிறுவனம் சார்பில் காரனேசன் செடிகளை பயிர்ப் பெருக்கம் செய்வதற்காக அரசிடம் கோரிக்கை மனு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார்.

÷தொடர்ந்து உதகை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் மற்றும் பேராசிரியர் என்.செல்வராஜ் சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளில் உள்ள பல்வேறு விஞ்ஞானிகள் இப்பயிற்சியில் காரனேசன் சாகுபடிக்கான உயரிய தொழில்நுட்பங்கள் குறித்து விவரித்தனர்.

÷முன்னதாக கோவை வேளாண்மை பல்கலைக்கழக மலரியல் துறை தலைவர் பேராசிரியர் ஜவஹர்லால் வரவேற்றார். முடிவில் உதகை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய துணைப் பேராசிரியர் வி.ஜெகதீஸ்வரி நன்றி கூறினார்.

**மலர் சாகுபடியாளர்களுக்கு உதகையில் பயிற்சி முகாம்**

First Published : 11 Dec 2011 10:35:58 AM IST

உதகை, டிச. 10: உதகையில் காரனேசன் மலர் சாகுபடிக்கான அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் குறித்த ஒருநாள் பயிற்சி முகாம் நடைபெற்றது.

÷உதகை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமில், காரனேசன் மலர் சாகுபடியில் ஈடுபட்டுள்ள 35 மலர் சாகுபடியாளர்கள் பங்கேற்றனர். பயிற்சி முகாமை கோவை வேளாண்மை பல்கலைக்கழக மேலாண் குழு உறுப்பினர் ஆர்.அர்ச்சுணன் தொடங்கி வைத்தார்.

÷அப்போது அவர் பேசுகையில், நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்கமும் தோட்டக்கலைத் துறையும் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையமும் இணைந்து காரனேசன் உற்பத்தி நிறுவனம் சார்பில் காரனேசன் செடிகளை பயிர்ப் பெருக்கம் செய்வதற்காக அரசிடம் கோரிக்கை மனு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார்.

÷தொடர்ந்து உதகை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் மற்றும் பேராசிரியர் என்.செல்வராஜ் சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளில் உள்ள பல்வேறு விஞ்ஞானிகள் இப்பயிற்சியில் காரனேசன் சாகுபடிக்கான உயரிய தொழில்நுட்பங்கள் குறித்து விவரித்தனர்.

÷முன்னதாக கோவை வேளாண்மை பல்கலைக்கழக மலரியல் துறை தலைவர் பேராசிரியர் ஜவஹர்லால் வரவேற்றார். முடிவில் உதகை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய துணைப் பேராசிரியர் வி.ஜெகதீஸ்வரி நன்றி கூறினார்.

## உழவர் அட்டை பெறுவது எப்படி?

First Published : 11 Dec 2011 03:19:06 PM IST

விழுப்புரம், டிச.10: விவசாயிகள் உழவர் அட்டையைப் பெற கிராம நிர்வாக அலுவலரை அணுகி பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் கா.த.மணிமேகலை தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விவசாயம் சார்ந்த பணிகளில் ஈடுபடுவர்களுக்கு முதல்வர், உழவர் பாதுகாப்பு திட்டத்தை அறிவித்து அத்திட்டத்தில் சேரும் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கியுள்ளார்.

இதுவரை உழவர் அடையாள அட்டை பெறாத விவசாயிகள் விவசாயம் சார்ந்தத் தொழில் செய்து வருபவர்களுக்கு தற்போது அடையாள அட்டை வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன்படி விவசாயம் சார்ந்தத் தொழில்களான தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்த்தல், பயிர், புல், கால்நடை, மரங்கள் வளர்த்தல், பால் பண்ணை, கோழிப்பண்ணை, உள்ளூர் மீன்பிடி தொழில் செய்தல், உரவகையிலான பயிர் வளர்க்க நிலத்தை பயன்படுத்துதல், நிலத்தை மேய்ச்சலுக்குப் பயன்படுத்துதல் ஆகிய பணிகளைச் செய்து வரும் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், உழவர் பாதுகாப்பு அட்டையை பெறத் தகுதியானவர்கள்.

மேலும் 2.50 ஏக்கர் நஞ்சை நிலம் அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலத்தைச் சொந்தமாக வைத்திருக்கும் 18 வயது முதல் 65 வயது வரையுள்ள நேரடி விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலில் ஈடுபடும் சிறு, குறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், குத்தகை அடிப்படையில் பயன்படுத்தும் விவசாயிகள் ஆகியோர் தமிழக அரசின் உழவர் பாதுகாப்பு அடையாள அட்டை பெறத் தகுதியானவர்கள்.

ஒரு குடும்பத்தில் விவசாயத் தொழில்களில் ஈடுபடும் கணவன், மனைவி மற்றும் அவர்களைச் சார்ந்து வாழும் குடும்ப உறுப்பினர்களுக்கும் உழவர் பாதுகாப்பு அடையாள அட்டை வழங்கப்படும்.

உழவர் பாதுகாப்பு அடையாள அட்டை வைத்திருப்பவர்களுக்கு விபத்து நிவாரண உதவித் தொகை, முதியோர் உதவித் தொகை, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை, உறுப்பினர்களின் குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை ஆகிய நல உதவிகள் வழங்கப்படும்.

விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களின் குடும்பங்கள் 6,94,658 உள்ளன. அதில் மொத்த உறுப்பினர்கள் 16,29,695 பேர் உள்ளனர். இதுவரை 6,77,674 குடும்பங்களுக்கு அடையாள வில்லைகள் (டோக்கன்) வழங்கப்பட்டுள்ளது.

தற்போது விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் செய்பவர்கள் குறித்து, கிராம நிர்வாக அலுவலர்கள் மூலமாகக் கணக்கெடுக்கும் பணி துவங்கி உள்ளது.

எனவே விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் விவசாயம் சார்ந்தத் தொழிலாளர்கள் கிராம நிர்வாக அலுவலரிடம் தங்களது ஆவணங்களைக் காண்பித்து பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார் மணிமேகலை.

தினமலர்
உண்மையின் உரைகல்

**கார்த்திகை விரதம்: மீன் விற்பனையில் சரிவு**

டிசம்பர் 11,2011,11:10



திருப்பூர் : கார்த்திகை மாத விரதத்தால், நுகர்வோர் வருகை குறைந்துள்ளது; நெய்தல் அங்காடியில் மீன் விற்பனை 80 சதவீதம் சரிவடைந்தது.திருப்பூரில் மீன் விற்பனை செய்யும் நெய்தல் அங்காடிகள் குமார்நகர், வீரபாண்டி, புஷ்பா தியேட்டர், அவிநாசி ஆகிய நான்கு இடங்களில் செயல்படுகிறது. தென்மாவட்டங்களில் இருந்து கடல் மீன், பாலாறு, திரு மூர்த்தி அணை பகுதிகளில் இருந்து ஆற்று மீன் கொண்டுவரப்பட்டு, நான்கு கடைகளிலும் சேர்ந்து நாளொன்றுக்கு 700 கிலோ முதல் 1 டன் வரை மீன் விற்பனை நடந்துவந்தது. கார்த்திகை மாதம் துவங்கியதையடுத்து, அய்யப்ப பக்தர்கள் மாலை அணிந்து விரதம் இருக்க துவங்கினர். விரதம் காரணமாக பெரும்பாலானோர் அசைவ உணவு களை தவிர்த்து சைவ உணவுக்கு மாறியதால், திருப்பூரில் நெய்தல் அங்காடிகள் நுகர்வோர் வரத்து இன்றி, வெறிச்சோடி காணப்படுகின்றன.வழக்கமாக நாளொன்றுக்கு 70 கிலோ வரை மீன் விற்பனை நடந்து வந்த குமார்நகர் அங்காடியில் கடந்த இரண்டு நாட்களாக முற்றிலும் மீன் விற்பனையின்றி காணப்படுகிறது. வீரபாண்டி, அவிநாசி, புஷ்பாதியேட்டர் மீன் அங்காடிகளிலும் தினமும் 15 கிலோ மட்டுமே மீன் விற்பனையாகிறது; நான்கு அங்காடிகளிலும் சேர்த்து மொத்தம் 20 சதவீதம் மட்டுமே மீன் விற்பனை நடக்கிறது.விற்பனை குறைந்ததால், மார்க்கெட்டில் கடல் மீன்கள் விலை குறைந்து வருகிறது. நேற்றைய நிலவரப்படி, வஞ்சிரம் ரூ. 290; நெத்திலி 70; பாறை 160; ஊழி 120; முரல் 110; அயிலை 70; வாளை மீன் 140 ரூபாயாக விலை குறைந்திருந்தது.

50 சதவீதம் மானியத்தில் காய்கறி விதை விநியோகம்

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2011,01:54 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: "ஐம்பது சதவீதம் மானிய விலையில், காய்கறி விதைகள் விநியோகம் செய்யப்படுகிறது' என, புதுச்சத்திரம் தோட்டக்லை உதவி இயக்குனர் கங்காதரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

புதுச்சத்திரம் வட்டாரத்தில், தற்போது பெய்துள்ள மழைநீரை பயன்படுத்தி, ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் 2011-12ம் ஆண்டிற்கான மார்கழி, தை பட்டத்துக்கு ஏற்ற காய்கறி விதைகளான, அவரை, புடல், கொத்தவரை, சிறுகீரை, மிளகாய், வெந்தயம், வெண்டை, பிரெஞ்ச் பீன்ஸ், சுரை போன்ற விதைகளை, 50 சதவீதம் மானிய விலையில், இதர விவசாய மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கும் வழங்க இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

காய்கறி விதைகள், ஒரு விவசாயிக்கு அரை ஹெக்டேருக்கு வழங்கப்படும். விதைகளை பெறுவதற்கு துணை தோட்டக்கலை அலுவலர் மற்றும் தங்கள் பகுதிக்கு வருகிற உதவி வேளாண்

அலுவலர்களை அணுகி விதைகளை பெற்று பயன்பெறலாம்.
இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**கடல் மீன் விற்பனை மேட்டூரில் விறுவிறுப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2011,01:54 IST

கருத்தை பதிவு செய்ய

மேட்டூர்: அணை மீன்கள் விற்பனை செய்யப்பட்ட மேட்டூர் சுற்றுப்பகுதியில், நேற்று கடல் மீன்கள் மலிவு விலைக்கு விற்பனை செய்யப்பட்டது.
மேட்டூர் அணையில் தினமும், 500 கிலோ மீன்கள் பிடிபடுகிறது. இந்த மீன்களை வியாபாரிகள் மேட்டூர் முனியப்பன் கோவில், மேட்டூர் ஆர்.எஸ்., சாம்பள்ளி, குஞ்சாண்டியூர் உள்பட பல்வேறு பகுதியில் விற்பனை செய்கின்றனர். மேட்டூர் அணையில் தேவையான அளவு மீன்கள் பிடிபடுவதால், கடல் மீன்கள் மேட்டூருக்கு குறைந்த அளவிலேயே விற்பனைக்கு வரும்.
மேலும், விற்பனைக்கு வரும் கடல் மீன்கள் விலை, அணை மீன்களை விட அதிகமாக இருக்கும் என்பதால் பொதுமக்கள் யாரும் கடல்,மீன்களை விரும்பி வாங்குவதில்லை.
முல்லைபெரியார் அணை பிரச்னையை தொடர்ந்து கடந்த சிலநாட்களாக தமிழக கடற்பகுதியில் பிடிபடும் மீன்கள் கேரளாவுக்கு அனுப்ப முடியவில்லை.
அதனால், நேற்று மேட்டூருக்கு சாளை, மத்தி, இரால், கடல் மீன்கள் அதிக அளவில் விற்பனைக்கு வந்தது. கடல் மீன்கள் அனைத்தும் மேட்டூர் அணை மீன்களை விட விலை குறைவாக இருந்தது.
அதனால், நேற்று மேட்டூர் பகுதி பொதுமக்கள் கடல் மீன்களை வாங்கிச் சென்றதால், அணை மீன்கள் விற்பனை குறைந்து விட்டது.

**ஆடுகளை நல்ல முறையில் வளர்த்து பயன்பெறணும்: துணை சபாநாயகர்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2011,01:54 IST

கருத்தை பதிவு செய்ய

ராசிபுரம்: ""அரசு சார்பில் வழங்கப்படும் ஆடுகளை நல்லமுறையில் வளர்த்து, தங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும்,'' என, துணை சபாநாயகர் தனபால் பேசினார்.
ராசிபுரம் அடுத்த அக்கரைப்பட்டி, அலவாய்பட்டி, அணைப்பாளையம் ஆகிய பஞ்சாயத்துகளில், தமிழக அரசின் இலவச ஆடுகள் வழங்கும் விழா நடந்தது.
விழாவுக்கு, மாவட்ட வழங்கல் அலுவலர் சுவாமிநாதன் தலைமை வகித்தார். கால்நடை

பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் சண்முகபாரதி, உதவி இயக்குனர் ஜெயச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை சபாநாயகர் தனபால் பங்கேற்று, 134 பேருக்கு, 16.68 லட்சம் ரூபாய் மதிப்பில் தலா நான்கு ஆடுகள் வழங்கி பேசியதாவது:

சமுதாயத்தில், அடித்தளத்தில் வாழ்ந்து வருபவர்களுக்கு, தமிழக முதல்வர், விலையில்லா ஆடுகள் வழங்கும் அறிவித்து செயல்படுத்தி வருகிறார். இத்திட்டத்தின் கீழ் ஏழ்மையிலும், ஏழ்மையான குடும்பங்களுக்கு, 10 ஆயிரம் ரூபாய் மதிப்பில் நான்கு ஆடுகள் வழங்கப்படுகிறது.

மேலும், கொட்டகை அமைக்கவும், தீவன செலவுக்காகவும், 2,000 ரூபாய் வழங்கப்படுகிறது. பயனாளிகள் நேரடியாக சந்தைக்கு சென்று தங்களுக்கு விருப்பப்பட்ட ஆடுகளை வாங்கிக்கொள்ளலாம். ஆடுகளுக்கு காப்பீடும் செய்யப்படுகிறது. கால்நடை மருத்துவர் மூலம் ஆடுகள் பராமரிப்பு குறித்த பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

ஏழ்மையிலும், ஏழ்மையான குடும்பங்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற நோக்கில், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், ஏழை மக்களின் வாழ்வாதாரம் உறுதி செய்யப்படுகிறது. அரசு சார்பில் வழங்கப்படும் ஆடுகளை நல்லமுறையில் வளர்த்து, தங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில், மாவட்ட பஞ்சாயத்து கவுன்சில் சந்திரசேகரன், வெண்ணந்தூர் யூனியன் சேர்மன் தமிழ்ச்செல்வி, பஞ்சாயத்து தலைவர்கள் ராஜா, ராஜேந்திரன், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**நிலக்கடலையில் அதிக மகசூல் நாளை பயிற்சி முகாம் விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2011,00:54 IST

கருத்தை பதிவு செய்ய

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தி ல் நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து பயிற்சிபெற விரும்பும் விவசாயிகள் வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நாளை (13ம் தேதி) நடைபெறவுள்ள பயிற்சி முகாமில் பங்கேற்கலாம். வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையம் வெளியிட்ட அறிக்கை: பயிர் சாகுபடியில் குறைந்த செலவில் அதிக வருவாய் ஈட்டுவதற்கான வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையம் அவ்வப்போது பயிற்சி அளித்துவருகிறது. இதன் தொடர்ச்சியாக நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்த பயிற்சி முகாம் நாளை நடக்கிறது. இதில், இறவை மற்றும் மானாவாரிக்கு ஏற்ற நிலக்கடலை ரகங்கள் தேர்வு செய்யும் முறை, விதைப்பு முறை, உர நிர்வாகம், பூச்சி மற்றும் நோய் தாக்குதலை

கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மாவட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்துவரும் விவசாயிகளுக்கு இந்த பயிற்சி மிகவும் பயனுள்ளதாக அமையும். எனவே நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற விரும்பும் விவசாயிகள் பயிற்சி முகாமில் பங்கேற்கலாம். இதுகுறித்து மேலும் தகவல்பெற விரும்புவோர் 04322-290321 மற்றும் 95783 05324 ஆகிய எண்களில் தொடர்புகொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 50 சதவீதம் மானியத்தில் காய்கறி விதை விநியோகம்

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2011,01:54 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: "ஐம்பது சதவீதம் மானிய விலையில், காய்கறி விதைகள் விநியோகம் செய்யப்படுகிறது' என, புதுச்சத்திரம் தோட்டக்லை உதவி இயக்குனர் கங்காதரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

புதுச்சத்திரம் வட்டாரத்தில், தற்போது பெய்துள்ள மழைநீரை பயன்படுத்தி, ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் 2011-12ம் ஆண்டிற்கான மார்கழி, தை பட்டத்துக்கு ஏற்ற காய்கறி விதைகளான, அவரை, புடல், கொத்தவரை, சிறுகீரை, மிளகாய், வெந்தயம், வெண்டை, பிரெஞ்ச் பீன்ஸ், சுரை போன்ற விதைகளை, 50 சதவீதம் மானிய விலையில், இதர விவசாய மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கும் வழங்க இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

காய்கறி விதைகள், ஒரு விவசாயிக்கு அரை ஹெக்டேருக்கு வழங்கப்படும். விதைகளை பெறுவதற்கு துணை தோட்டக்கலை அலுவலர் மற்றும் தங்கள் பகுதிக்கு வருகிற உதவி வேளாண் அலுவலர்களை அணுகி விதைகளை பெற்று பயன்பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## "ஆத்மா' பண்ணைபள்ளி துவக்கம்

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2011,05:51 IST

கருத்தை பதிவு செய்ய

மதுரை:மதுரை தேனூரில் "ஆத்மா' திட்டத்தின் கீழ் பண்ணை பள்ளி துவக்க விழா நடந்தது.மேற்கு ஒன்றிய தலைவர் பழனியம்மாள் தலைமை வகித்தார். தேனூர் ஊராட்சி தலைவர் லோகசுந்தரி முன்னிலை வகித்தார். திருந்திய நெல் சாகுபடி குறித்து மேற்கு வட்டார வேளாண் உதவி

இயக்குனர் வடிவேல்குமார் மேற்பார்வையில் விவசாயிகளுக்கு களப்பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் இயந்திரம் மூலம் களை எடுத்தல், மருந்து தெளிக்கும் முறைகள் குறித்து செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

**விளைச்சல் பாதிப்புக்கு நஷ்டஈடு கிடைக்கவில்லைபயிர் இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்த ஆர்வமில்லை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2011,04:39 IST

கருத்தை பதிவு செய்ய

திருவாடானை:கடந்தாண்டு விளைச்சல் பாதிக்கப்பட்டதற்கு நஷ்டஈடு தராததால் இந்தாண்டு பயிர் இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்துவதில் விவசாயிகள் ஆர்வமில்லாமல் உள்ளனர். திருவாடானை தாலுகாவில் விவசாய பணி மும்முரமாக நடந்து வருகிறது. தற்போது பயிர்கள் வளர்ந்து வரும் நிலையில் உரமிடுவது தீவிரமடைந்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன், விவசாயம் பாதிக்கப்பட்டதால் நஷ்டஈடாக விவசாயிகள் பயிர் இன்சூரன்ஸ் மூலம் பல ஆயிரம் ரூபாய் பெற்றனர். பெரிய விவசாயிகளுக்கு பல லட்சம் கிடைத்தது.

இதனால் ஆண்டுதோறும் பயிர் இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்துவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வந்தனர்.கடந்த இரண்டு ஆண்டுகளாக பயிர் இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்துவதில் விவசாயிகள் போதிய ஆர்வமில்லாமல் உள்ளது. அதிலும் இந்தாண்டு போதிய மழை பெய்ததால் பிரிமியம் செலுத்துவதில் அக்கறை இல்லாமல் உள்ளனர்.விவசாயிகள் சிலர் கூறும்போது: இந்தாண்டு மழை பெய்தாலும் இன்னும் தண்ணீர் தேவைப்படுகிறது. தொடர்ந்து 15 நாட்களுக்குள் மீண்டும் மழை பெய்தால் மட்டுமே முழு விளைச்சலை காணமுடியும். சென்ற ஆண்டு நோய் தாக்குதலால் விளைச்சல் பாதிக்கப்பட்டது. நஷ்டஈடும் கிடைக்கவில்லை. ஆகவே இந்தாண்டு பிரிமியம் செலுத்துவதில் ஆர்வம் காட்டவில்லை, என்றனர்.

**பருப்பு விலை குறைவு; சர்க்கரை விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2011,04:49 IST

சிவகங்கை:பயறு, பருப்பு வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது. சர்க்கரை இறக்குமதி குறைந்துள்ளதால் விலை அதிகரித்துள்ளது.சிவகங்கையில் மளிகை பொருள் விலை

விபரம் (கிலோ):துவரம் பருப்பு- 65; 2 வது ரகம் -58; தட்டப்பயறு-46; 2 வது ரகம் -44; கடலை பருப்பு- 54; 2 வது ரகம் -52; உளுந்தம் பருப்பு- 65; 2 வது ரகம் -62; வெள்ளை கொண்டக் கடலை -100; 2 வது ரகம் 96. சிவப்பு கொண்டக்கடலை-50; 2 வது ரகம்- 48; பாசிப் பருப்பு-78; 2 வது ரகம் -74; மொச்சைப் பயறு- 44; வெள்ளை மொச்சை- 70; பட்டாணி- 24; வெள்ளை பட்டாணி- 28; மல்லி- 80; 2 வது ரகம் -68; புளி- 100; பழைய புளி -90; பொரி கடலை -62; வத்தல் புதியது- 95; பழையது-65; பூண்டு-120; தரப்பூண்டு- 80; வெல்லம் -38; கருப்பட்டி (வேம்பார்)- 80; சர்க்கரை -31; சோம்பு- 130; வெந்தயம்- 450; கசகசா- 280; சீரகம்-200; கடுகு- 400; மிளகு -300; மஞ்சள் -180 ரூபாய்.
அரிசி(கிலோ): கல்சர் பொன்னி- 22; புதியது- 23; டீலக்ஸ் பொன்னி- 24; புதியது- 22; ஐ.ஆர்.20 -20; பொன்னி -28; புதியது- 25; பொன்னி பச்சரிசி -30; ஐ.ஆர்.20 பச்சரிசி- 22; இட்லி அரிசி- 23; கோதுமை -24; சோளம் -22; விற்ற கம்பு -16; கேப்பை -18; வரகரிசி -36 ரூபாய்.எண்ணெய்: கடலை எண்ணெய் -86; பாமாயில் -60; நல்லெண்ணெய் -90, தேங்காய் எண்ணெய் -120 ரூபாய்.

**விவசாயிகளுக்குசுற்று சூழல் பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2011,04:10 IST

விருதுநகர்:விவசாயிகளுக்கு சுற்றுச்சூழல் குறித்து விழிப்புணர்வு பயிற்சி வழங்கப்பட்டது.பொதுப்பணித்துறை நீர் வள, நில வள ஆதார அமைப்பு, சுற்றுச்சூழல் குழுமக்கோட்டம், டெஸ்ட் தொண்டு நிறுவனம் இணைந்து,பயிற்சி வழங்கினர். அர்ச்சுனா நதி உப வடி நிலப்பகுதி விவசாயிகளுக்கு திருநெல்வேலி, மணிமுத்தாறு அகத்திய மலை சமுதாயம் சார்ந்த இயற்கை வள பாதுகாப்பு மையத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. மம்சாபுரம், கோட்டைப்பட்டி, இடையன்குளம், சீனியாபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். காடுகளின் அவசியம், பாலிதீன் பொருட்கள் தவிர்ப்பு, வன விலங்குகள் பாதுகாப்பு, மழை பொழிவிற்கும், விவசாயத்திற்கும் வனங்களின் பங்கு குறித்து எம்.மதிவாணன் பேசினார். கோட்ட உதவி செயற் பொறியாளர் கரோலின் ராஜசிங், இளம் பொறியாளர் அர்ச்சுனன், டெஸ்ட் நிறுவன இயக்குனர் ஜோசப்ராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மானியத்தில் மீன் பண்ணை வளர்க்க விண்ணப்பிக்கலாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2011,04:49 IST

சிவகங்கை:தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2011-2012 ஆண்டிற்கு மீன்வளத்துறையின் மூலம் சிவகங்கை மாவட்டத்தில் மீன் குஞ்சு உற்பத்தி மையம் அமைக்கலாம். இதில் 50 சதவீதம் மானியத்துடன் 5 லட்சம் வரை கடன் வழங்கப்படவுள்ளது. இதில் 10 லட்சம் மதிப்பில் வருடத்திற்கு 80 லட்சம் முதல் ஒரு கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யக்கூடிய இடமாக இருக்க வேண்டும். மீன் குஞ்சு உற்பத்தி மையம் அமைக்க உள்ள இடம் அதற்கு தகுதியானதாகவும், வெள்ள அபாய ஏற்படாத பகுதியாக இருக்க வேண்டும். நல்ல தரமான நில நீர் அல்லது ஆற்று நீர் பாசன பகுதியில் மின் வசதி, சாலை வசதி கொண்டதாக இருக்க வேண்டும். மீன் குஞ்சு மையம் புதிதாக அமைக்க வேண்டும். 2 ஹெக்டேர் சொந்த நிலம் அல்லது 10 வருட குத்தகை பெற்றிருக்க வேண்டும். விவசாய பயனாளிகள் தேர்வின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். விருப்பமுள்ளவர்கள், மீன்வள உதவி இயக்குனர், உள்நாட்டு மீன் வளம், காளிமுத்தன் தெரு, சிவகங்கை என்ற முகவரியில் விண்ணப்பங்களை பெறலாம்.

**வேளாண் இயந்திரம் வழங்கல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2011,23:58 IST

வேலூர்: வேலூர் கலெக்டர் அலுவலகத்தில் வேளாண் பொறியியல் துறையின் மூலம் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நவீன வேளாண் இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கும் விழா நடந்தது. கலெக்டர் நாகராஜன் 50 லட்ச ரூபாய் மதிப்புள்ள 37 வேளாண் இயந்திரங்களை வழங்கினார். வேளாண் பொறியியல் துறை செயற் பொறியாளர் இன்பநாதன், வேளாண் இணை இயக்குனர் தமிழ் செல்வன், கலெக்டரின் நேர் முக உதவியாளர் சேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மஞ்சள் பயிர் காப்பீடு விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2011,22:23 IST

சிறுபாக்கம் : சிறுபாக்கம் குறுவட்டத்தில் உள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு மஞ்சள் பயிருக்கு காப்பீடு திட்ட விவசாயிகள் விழிப்புணர்வு முகாம் நடந்தது.

தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் முருகன் தலைமை தாங்கினார். மாவட்ட பயிர் காப்பீடு திட்ட ஒருங்கிணைப்பாளர் ராமச்சந்திரன் மஞ்சள் பயிருக்கு காப்பீடு செய்ய வேண்டிய

வழிமுறைகள் எவ்வாறு செலுத்தப்படவேண்டும். செலுத்துவதற்கான கால அளவீடு, மஞ்சள் பயிருக்கான நோய் தாக்குதல் குறித்த சந்தேகங்கள். கூடுதல் மகசூலுக்குரிய வழிமுறைகள் குறித்து பேசினார்.
கூட்டத்தில் அலுவலர்கள் கோவிந்தராஜ், உதயசூரியன், ஊராட்சித் தலைவர்கள் பெரியசாமி, தேவேந்திரன், அன்பரசு, முதுநிலை விவசாயிகள் விஜயகுமார், ராஜேந்திரன் உள்ளிட்ட 300 பேர் பங்கேற்றனர்.

**பயறு வகை பயிர்களில் 110 ஹெக்டர் விதைப்பண்ணை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2011,23:52 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் கொள்ளு மற்றும் கொண்டை கடலை பயறு வகைகளில் 110 ஹெக்டர் விதைப்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. விதை சான்று உதவி இயக்குநர் வெங்கடேசன் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரி, நல்லம்பள்ளி, பாலக்கோடு பென்னாகரம், காரிமங்கலம், அரூர், மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி வட்டாரங்களில் பனி காலத்தில் மட்டும் பயிர் செய்யும் பயறு வகை பயிர்களான கொள்ளு மற்றும் கொண்டை காடலை பயிர்களிடம் மட்டும் இது வரையில் 110 ஹெக்டேரில் ஆதார நிலை மற்றும் சான்று நிலைகளில் அரசு உற்பத்தியாளர்களால் விதைப்பண்ணை அமைக்க பதிவு செய்யப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட விதைப்பண்ணைகள் தற்போது விதை சான்று அலுவலர்களால் வயலாய்வு செய்யும் பணி நடந்து வருகிறது. விதை பண்ணை பயிர்கள் வளர்ச்சி பருவத்திலும், பூப்பருவத்திலும் உள்ளது. அதிக மகசூல் பெற விதைபண்ணை அமைத்துள்ள விவசாயிகள் பூப்பருவத்திலும் மற்றும் இளம் காயகள் உருவாகிய தருணத்தில் 2 சதவீத டி.ஏ.பி., கரைசலை உரிய முறையில் தயார் செய்து மாலை நேரங்களில் தெளிக்கவும். டி.ஏ.பி., உரம் அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. கொள்ளு மற்றும் கொண்டை கடலை பயிர்களில் மட்டும் பொது விநியோக திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், உணவு பாதுகாப்பு திட்டம் மற்றும் விதை கிராம திட்டம் ஆகிய திட்டங்களில் நடப்பாண்டில் 100 மெட்ரிக் டன் சான்று பெற்ற விதைகள் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இது குறித்து தகவல் அறிய வட்டார வேளாண் விரிவாக்க மையங்களை விவசாயிகள் அணுகி உதவி விதை அலுவலர்களை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## திருந்திய நெல் சாகுபடி முறையில் மகசூல் அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2011,23:37 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்யப்பட்ட வயலில் நெல் மகசூல் அதிகரித்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கே.ஆர்.பி., அணை மற்றும் தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதியில் அதிக பரப்பில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. பல்வேறு காரணங்களால் நெல் மகசூல் குறைந்து வந்த நிலையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் நீர்வள நில வள திட்டம் மற்றும் பையர் மண்டல ஆராய்ச்சி நிலையம் ஆகியோர் இணைந்து மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளாக திருந்திய நெல் சாகுபடி முறையை அறிமுகப்படுத்தினர். திருந்திய நெல் சாகுபடி முறை குறைந்த அளவு நீரைப்பயன்படுத்தி அதிகளவு மகசூல் மற்றும் வருமானத்தை கொடுக்க கூடியதாகும். இந்த சாகுபடிக்கு குறைந்த விதை, இளவயது நாற்றுகளை நடுதல், அதிக இடைவெளி விட்டு நடுதல், களை கருவி மூலம் களை எடுத்தல், நீர் மறைய நீர் பாய்சல் மற்றும் உரங்களை குறைந்த அளவே பயன்படுத்துதல் போன்ற காரணிகளை பின்பற்றுவது திருந்திய நெல் சாகுபடி முறையாகும். திருந்திய நெல் சாகுபடி முறையில் இளவயது நாற்றுகளை சதுர நடவு முறையில் நடுவதற்கு போதிய அளவிலான கைத்தேர்ந்த விவசாய மகளிர் கிடைப்பது அரிதாக உள்ளது. எனவே, இந்த பிரச்னையை தீர்க்க தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், வி.எஸ்.டி.டி., நிறுவனம் ஆகியோர் இணைந்து மிககுறைந்த ஆட்களை கொண்டு இளவயது நாற்றுகளை சதுர நடவு முறையில் நடுவதற்கு மேம்படுத்தப்பட்ட யாஞ்சி நடவு இயந்திரம் மூலமாக நடவு செய்ய திட்டமிட்டு சூளகிரி கோட்டத்திலுள்ள பிள்ளே கொத்தூர், பார்த்தகோட்டா, போடூர், கங்காபுரம் போன்ற கிராமங்களில் நூறு ஏக்கரில் செயல் விளக்கதிடல் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் ஐந்து யாஞ்சி நடவு இயந்திரங்கள் மையங்களுக்கு வழங்கப்பட்டு ஒரு இயந்திரத்தின் மூலம் ஒரு நாளைக்கு 2.5 ஏக்கர் நடவு செய்து ஏக்கருக்கு 1,500 ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்பட்டது. இந்த செயல்பாடுகளை பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையம், நீர்வள நிலவள திட்டத்தின் மூலம் கண்காணிக்கப்பட்டது. இதன் மூலம் விவசாயிகளின் மகசூல் திறன் அதிகரித்ததோடு நிகர வருமானமும் பெருகியது. பிள்ளேகொத்தூர் கிராமத்தில் வேளாண் துறையினர் முன்னிலையில் அறுவடை வயல் விழா மேற்கொள்ளப்பட்டது. திருந்திய நெல் சாகுபடி முறையின் மூலம் ஏக்கருக்கு 3.3 டன் அளவில் மகசூல் பெறப்பட்டது. இந்த மகசூல் சாதாரண முறையில் பெறப்பட்ட நெல் மகசூலை விட 27 சதவீதம் அதிகமாகும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் விவசாயிகளுக்கு கூடுதல் மகசூல் கிடைத்த நிலையில் தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகம் திருந்திய நெல் சாகுபடி முறையில் பசுமை படை மூலம் வரும் 2012ம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டத்தில் அதிக பரப்பில் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**பஞ்சாபில் ஒரு கிலோ உருளை ஒரு ரூபாய்!**

First Published : 11 Dec 2011 02:15:06 AM IST



சண்டீகர்,டிச.10: பஞ்சாப் மாநிலத்தில் ஒரு கிலோ உருளைக்கிழங்கு ஒரு ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

உருளைச் சாகுபடியாளர்களுக்கு இதனால் ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு காரணமாக வரும் 15-ம் தேதி ஜலந்தரில் கூடி, விற்காத உருளைக்கிழங்கை சாலையில் கொட்டி கிளர்ச்சி நடத்த விவசாயிகள் முடிவு செய்துள்ளனர்.

இந்த அளவுக்கு உருளைக் கிழங்கு விலை சரிய விவசாயிகளும் ஒரு காரணம் என்று மாநில அரசு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பஞ்சாபில் ஆண்டுதோறும் 80 ஆயிரம் ஹெக்டேரில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுக்கு 21 லட்சம் டன் உருளைக்கிழங்கு விளைகிறது. நாட்டின் மொத்த உருளைக்கிழங்கு உற்பத்தியில் பஞ்சாபின் பங்கு மட்டுமே 5% முதல் 7% வரை இருக்கிறது. இந்த உருளைக்கிழங்கில் 60% விதையாக பிற மாநிலங்களால் வாங்கப்படுகிறது.

கடந்த ஆண்டு விவசாயிகள் உருளைக்கிழங்கின் விலை மேலும் அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பில் குளிர்பதனக் கிடங்குகளில் கொட்டி பாதுகாத்து வைத்தனர். இந்தப் பருவத்திலும் உருளைக்கிழங்கு அபரிமிதமாக விளைந்தது.

அதே சமயம் குஜராத், கர்நாடகம், மகாராஷ்டிரம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் பஞ்சாபிடமிருந்து விதைக்காக உருளைக் கிழங்கை அதிகம் வாங்கவில்லை.

எனவே விற்பனை குறைந்துவிட்டது. இந்த நிலையில் பழைய கையிருப்பையும் விவசாயிகள் வேறு வழியின்றி சந்தைக்குக் கொண்டுவந்தனர். எனவே விலை மடமடவென்று சரிந்து கிலோ 2 ரூபாய் அல்லது ஒரு ரூபாய் என்று குறைந்துவிட்டது.

இந்த நிலையில் உருளைக் கிழங்கை பிற மாநிலச் சந்தைகளுக்கு லாரிகளிலும் ரயில்களிலும் அனுப்ப பழைய உருளைக்கு ஒரு கிலோவுக்கு ரூ.1 என்று சரக்குக் கட்டண மானியமும் ஏற்றுமதிக்கு ஒரு கிலோவுக்கு ரூ.2 என்று ஏற்றுமதி மானியமும் மாநில அரசால் தரப்பட வேண்டும் என்று விவசாயிகள் கோருகின்றனர்.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்த ஜலந்தரில் டிசம்பர் 15-ம் தேதி கூடி உருளைக் கிழங்கை சாலையில் கொட்டிப் போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர்.

இதற்கு முன்னர் இதே போல உருளை விளைச்சல் இருந்தபோது உள்நாட்டில் வேறு சந்தைகளுக்குக் கொண்டு செல்ல ஒரு கிலோவுக்கு 50 பைசாவும் ஏற்றுமதிக்கு ஒரு கிலோவுக்கு ரூ.1.50-ம் மானியமாக மாநில அரசால் தரப்பட்டிருக்கிறது. இப்போது அதே சலுகையை சற்றே விலை உயர்த்தித் தர வேண்டும் என்று கோருகின்றனர்.

இந்தக் கிளர்ச்சிக்காக கபுர்தலா, நவான்ஷஹர், பதிண்டா, லூதியானா, மோகா ஆகிய நகரங்களிலிருந்து விவசாயிகள் ஜலந்தர் வரவேண்டும் என்று விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதே சமயம், மாநில அரசு இந்தப் பிரச்னை குறித்து விரைவிலேயே விவாதித்து சுமுகமான முடிவை எடுத்துவிடும் என்று மாநில அரசின் உயர் அதிகாரி ஒருவர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

**மஞ்சள் பயிரில் இலைப்பேன்; விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2011,21:26 IST

பொங்கலூர் : மஞ்சள் பயிரில் இலைப்பேன் தாக்குதல் அதிகரித்துள்ளதால், மஞ்சள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பருவ மழை பெய்து வருவதாலும், காற்றில் ஈரப்பதம் அதிகமாக உள்ளதாலும் மஞ்சள் பயிரில் இலைப்பேன் தாக்குதல் தீவிரம் அடைந்துள்ளது. இலைப்பேன் இலைகளுக்கு அடியிலும், குருத்து பகுதியிலும் அதிகமாக காணப்படுகின்றன. இவை மிகவும் சிறிய உருவமாக உள்ளன. சாதாரணமாக பார்ப்பவர்களுக்கு இலைப்பேன் இருப்பதாக தெரியாது. உற்று கவனித்தால் மட்டுமே கண்ணுக்கு தெரியும்.

பல விவசாயிகள் தென்னையில் ஊடுபயிராக மஞ்சள் பயிரிட்டுள்ளனர். நிழல் உள்ள பகுதிகளில் இலைப்பேன் தாக்குதல் தீவிரமாக உள்ளது. இவை, இலைகளில் உள்ள பச்சையத்தை உண்டு வாழ்வ தால், மஞ்சள் தோகை சுருண்டு, தீயில் வாட்டியதுபோல் காணப்படும். நாளடைவில் மஞ்சள் பயிர் வறண்டு, விவசாயிகளுக்கு கடும் நஷ்டத்தை ஏற்படுத்துகிறது.

வேளாண் துறையினர் கூறுகையில், "வெப்பம் குறைவாகவும், நிழல் அதிகமாகவும் உள்ள இடங்களில் இலைப்பேன் தாக்குதல் தீவிரமாக இருக்கும். இலைப்பேன் தாக்கிய செடிகளுக்கு, மோனோ குரோட்டோபாஸ் அல்லது கியூரோகிரான் பூச்சி மருந்துடன் சூடோமோனஸ் கலந்து, ஒரு டேங்க்கிற்கு 30 மி.லி., வீதம் மருந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்,' என்றனர்.

**வேளாண் துறை சார்பில் விதை கிராமத்திட்ட பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2011,21:25 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை : மதுக்கரை வட்டாரம் வெள்ளலூர் கிராமம் இடையர்பாளையத்தில் விதை கிராமத் திட்டப்
பயிற்சி முகாம், வேளாண் துறையினரால் நடத்தப்பட்டது. பயிற்சிக்கு வெள் ளலூர் பேரூராட்சி தலைவர் மருதாசலம் தலைமை வகித்தார். வேளாண் துணை அலுவலர் அங்கராஜ் வரவேற்றார். வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) தமிழ்செல்வி, வேளாண் துறை சார்பில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் பற்றி விளக்கினார். விதைச் சான்று அலுவலர் ரவீந்திரா, விவசாயிகளுக்கு விதை உற்பத்தி பற்றிய பயிற்சி அளித்தார். வேளாண் திட்டங்கள் பற்றிய விவசாயிகளின் பல்வேறு சந்தேகங்களுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது.
முகாமில், நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். வேளாண் உதவி அலுவலர்கள் முருகநாதன், முருகன், தனலட்சுமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். வேளாண் உதவி அலுவலர் சித்ரா நன்றி கூறினார்.

**பயிர் உற்பத்தி திறனை அதிகரிக்க இருக்குது வழி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2011,04:22 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை : ""ஒருங்கிணைந்த உர மேலாண்மை முறைகளை பின்பற்றினால், எதிர்காலத்தில் மண்ணின் வளத்தை காக்கவும், பயிர் உற்பத்தி திறனை அதிகரிக்கவும் முடியும்," என, வேளாண் பல்கலை பதிவாளர் சுப்பையன் பேசினார்.சர்வதேச பயிர் ஊட்டச்சத்து நிறுவனம், தமிழ்நாடு வேளாண் பல்கலை சார்பில், "பயிர் உரமேலாண்மையின் முக்கிய பிரச்னைகள் மற்றும் வழிமுறைகள்' குறித்த பயிற்சி முகாம், கோவை வேளாண் பல்கலையில் நடந்தது. அமெரிக்க சர்வதேச பயிர் ஊட்டச்சத்து நிறுவனம், டில்லி சர்வதேச மக்காச்சோளம் மற்றும் கோதுமை அபிவிருத்தி நிறுவனங்களின் தொழிற்நுட்ப வல்லுனர்கள் பங்கேற்று, பல்கலை விஞ்ஞானிகளுக்கு பயிற்சி அளித்தனர்.வேளாண் பல்கலை பதிவாளர் சுப்பையன் கூறியதாவது: உணவுத் தேவையை பூர்த்தி செய்ய, உற்பத்தி திறனை இரு மடங்காக உயர்த்த வேண்டும். நாளுக்கு நாள் விளைநிலங்கள் குறைந்து வருவதால், அதிக உற்பத்தி திறனுடைய பயிர் ரகங்கள், நானோ தொழிற் நுட்பம், உயிரியல் தொழிற் நுட்பம் போன்ற புதிய அணுகுமுறைகள் மூலம், வேளாண்மையில் பயிர் உற்பத்தி இலக்கை அடைய முடியும். மண்ணின் அங்கக கரிமச்சத்து 0.5

சதவீதத்தை விட குறைவாக உள்ளது. 1970ல் ஒரு கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்து இடும்பொழுது, 15 கிலோவாக இருந்த உணவு உற்பத்தி, 2010ல் 4 கிலோவாக குறைந்துள்ளது. மண்ணில் 40 சதவீதம் துத்தநாகம், 33 சதவீதம் போரான் மற்றும் 41 சதவீதம் கந்தக சத்து குறைபாடாக உள்ளன.விளை நிலமான 19 மில்லியன் எக்டேரில், அமில மற்றும் காரத்தன்மை போன்ற இடர்பாடுகள் உள்ளன; ஒருங்கிணைந்த உர மேலாண்மை முறைகள் மட்டுமே, மண்ணின் வளத்தை காக்கவும், பயிர் உற்பத்தி திறனை அதிகரிக்கவும் தீர்வாக இருக்கும். இதற்காக, தமிழ்நாடு வேளாண் பல்கலை சார்பில் கணினி மென்பொருள் மூலம், உர நிர்வாக முறைகளை வழங்குகிறது. இந்திய பயிர் உற்பத்தியில், ஆண்டுக்கு 30 மில்லியன் டன் என்ற அளவில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்தை, மண்ணிலிருந்து பயிர் எடுத்துக் கொள்கிறது. ஆனால், 26 மில்லியன் டன் உரம் மட்டுமே மண்ணில் இடப்படுகிறது; இதனை, இயற்கை உரமிடுதல் மூலம் இடைவெளியை சரி செய்யலாம். முறையான மட்கும் தொழிற்நுட்பத்தை பயன்படுத்தி, நகர்புற திடக்கழிவுகளை மட்க வைப்பதன் மூலம், ஆண்டுக்கு 2.50 லட்சம் டன்கள் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து கிடைக்கும்; இதனால், 367 கோடி ரூபாய் மதிப்புள்ள உரத்தை சேமிக்கலாம்.இவ்வாறு, சுப்பையன் கூறினார். முகாமில், சர்வதேச மக்காச்சோளம் மற்றும் கோதுமை அபிவிருத்தி ஆராய்ச்சி மைய அறிவியலாளர் ஜாட், செகந்திராபாத் சர்வதேச பயிர் ஊட்டச்சத்து நிறுவன உதவி இயக்குனர் சத்யநாராயணா, தமிழ்நாடு வேளாண் பல்கலை பயிர் மேலாண் மைய இயக்குனர் ஜெயராமன் உட்பட பலர் பேசினர்.

**வெங்காய விவசாயிக்கு ரூ.3.12 கோடி மானியம் வழங்க முதல்வர் உத்தரவு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2011,03:08 IST

கருத்தை பதிவு செய்ய

பெரம்பலூர்: "வெங்காய விவசாயிகளுக்கு, 3.12 கோடி ரூபாய் மானியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்து முதல்வர் உத்தரவிட்டுள்ளார்' என பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் தரேஷ்அஹமது தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:சிறிய வெங்காய சாகுபடியில் பெரம்பலூர் மாவட்டம் மாநிலத்தில் முதலிடத்தில் உள்ளதால் சமீபத்தில் நடந்த கலெக்டர்கள் மாநாட்டில் தமிழக முதல்வர் சிறிய வெங்காயம் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்தி விளைச்சலை அதிகப்படுத்திட மானிய உதவி அளிக்கப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி பெரம்பலூர் மாவட்டத்துக்கு சிறப்பு திட்டமாக சிறிய வெங்காயம் பயிரிடும் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழக முதல்வர், 2011-12ம் ஆண்டிற்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் மாவட்டத்தில், 2,500 ஹெக்டேரில் சிறிய வெங்காயம் பயிரிட,

3.12 கோடி மானியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்.இதன்படி சிறிய வெங்காயம் பயிரிடும் விவசாயிகளுக்கு, 12 ஆயிரத்து, 500 மதிப்பில் அதிக விளைச்சல் தரக்கூடிய (ஒரு ஹெக்டேருக்கு, 18 டன் விளைச்சல்) கோ- வெங்காயம், 5 ரகம் விதை ஓர் ஏக்கருக்கு ஒரு கிலோ வீதம், ஒரு ஹெக்டேருக்கு, 2.5 கிலோ விதையும், ரசாயன உரங்களும் வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விவசாயிகள் தங்கள் விவசாய நிலத்திற்கான சிட்டா, அடங்கல், ஃபாஸ்போர்ட் சைஸ் ஃபோட்டோ, ரேஷன் கார்டு நகல் ஆகியவற்றுடன் வட்டார உதவி தோட்டக்கலை இயக்குநர், தோட்டக்கலை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்கள் ஆகியோரிடம் விண்ணப்பிக்க வேண்டும். இத்திட்டம் இந்த நிதியாண்டில், (2011-2012) மேற்கொள்ளப்பட உள்ளதால் விவசாயிகள் உடனடியாக விண்ணப்பிக்க வேண்டும்.மேலும் விவரங்களுக்கு தோட்டக்கலை துணை இயக்குநர், 94871-56511, 04328-29109, தோட்டக்கலை அலுவலர் தொழில்நுட்பம், 94430-01793, தோட்டக்கலை உதவி இயக்குநர் ஆலத்தூர், 94429-49688 மற்றும் 04328-267033, உதவி வேளாண்மை அலுவலர் பெரம்பலூர் 94426-32486, தோட்டக்கலை அலுவலர் வேப்பந்தட்டை 04328-264123, தோட்டக்கலை அலுவலர் வேப்பூர் 91500-17351 ஆகிய நம்பரில் தொடர்பு கொண்டு விவரங்களை பெறலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**கலர் உவர் நிலங்களை மேம்படுத்த மானியத்தில் இடுபொருள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2011,03:07 IST

கருத்தை பதிவு செய்ய

திருத்துறைப்பூண்டி: ""திருவாரூர் நாகை மாவட்டத்தில் உள்ள கலர் உவர் நிலங்களை மேம்படுத்த விவசாயிகளுக்கு மானிய விலையில், 2.64 லட்சம் ரூபாய் மதிப்புள்ள,14 வகையான வேளாண் ஈடுபொருள் வழங்கப்பட்டுள்ளது,'' என்று பட்டுக்கோட்டை தமிழ்நாடு வேளாண் பல்கலை தலைவர் பேராசிரியர் நடராஜன் தெரிவித்தார்.திருத்துறைப்பூண்டி ஆரியா மஹாலில் பட்டுக்கோட்டை வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் கலர் உவர் நிகழ்ச்சியில் நில சீர்திருத்தமும், நெல் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சியும் பேராசிரியர் நடராஜன் தலைமை வகித்து துவக்கி வைத்து பேசியதாவது:தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி முத்துப்பேட்டை மற்றும் நாகை மாவட்டத்தில் உள்ள வேதாரண்யம் யூனியன் பகுதிகளில், 81 ஏக்கர் பரப்பளவில் செயல்விளக்க திடல் நடைபெற்று வருகிறது.இத்திட்டத்தின் கீழ், 50 சதவீதம் மானியத்தில், 2.64 லட்சம் மதிப்பில் உள்ள கலர் உவர் நில சீர்திருத்திகளான திட்டம் மற்றும் கை பூண்டு உட்பட,14 வகையான வேளாண் இடுபொருள்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இதில், பங்கேற்று பயிற்சி பெற்ற விவசாயிகள் உவர் நில சீர்திருத்த முறைகளை கடைபிடித்து, நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறலாம்.இவ்வாறு அவர் பேசினார்.வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவர் பேராசிரியர் பார்த்தசாரதி பங்கேற்று, கலர் உவர் நிலங்களுக்கு ஏற்ற நெல் பயிர் ரகங்களான திருச்சி-1, 2, 3, ஓ 43, டி.கே.எம்., 9 மற்றும் பி.பி.டி.,5204 ரகங்கள் பற்றி விரிவான விளக்கம் அளித்தார்.திருவாரூர் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் மயில்வாகனன் கலந்துகொண்டு பேசும்போது, திருவாரூர் மாவட்டத்தில், 81 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கலர் உவர் மண் காணப்படுகிறது. விவசாயிகள் வேளாண் விஞ்ஞானிகள் கூறும் தொழில்நுட்ப கருத்துக்களை கேட்டறிந்து, இத்திட்டத்தை முறையாக பயன்படுத்திக் கொள்ளுமாறு விவசாயிகளை கேட்டுக்கொண்டார்.இதில், வேளாண் துணை இயக்குனர் இளஞ்செழியன், இணைப்பேராசிரியர் மோகன்தாஸ் உட்பட பலர் கலந்துகொண்டு பேசினர். 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிற்சியில் பங்கேற்றனர். உதவிபேராசிரியர் அருள்பிரகாஷ் நன்றி கூறினார்.

**புங்க மர விதையில் பயோ டீசல்: பள்ளி மாணவியர் சாதனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 11,2011,09:33 IST

கருத்தை பதிவு செய்ய

மயிலாடுதுறை: மயிலாடுதுறை அருகே, பள்ளி மாணவியர், புங்க மர விதையில் இருந்து எடுக்கப்பட்ட பயோ டீசலை கொண்டு, கார் இன்ஜினை இயக்கிக் காண்பித்தனர்.

நாகை மாவட்டம், மயிலாடுதுறை அடுத்த வடகரையில் உள்ள ஹாஜா சாரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவியர், பள்ளி நிர்வாகி ஜியாவுதீன் மற்றும் முதல்வர் குணசேகரன் ஆகியோர் உதவியுடன், புங்க மர விதையிலிருந்து எடுக்கப்பட்ட பயோ டீசலை கொண்டு, வாகன இன்ஜின்களை இயக்க முடியும் என கண்டுபிடித்துள்ளனர். ஹாஜா சாரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், நேற்று நடந்த நிகழ்ச்சியில், நாகை கலெக்டர் முனுசாமி முன்னிலையில், மாணவியர் செயல் முறை விளக்கம் காண்பித்தனர். முதலில், டீசலை கொண்டும், பின் தாங்கள் கண்டுபிடித்துள்ள புங்க மர விதையிலிருந்து எடுக்கப்பட்ட பயோ டீசலை கொண்டும், தொடர்ந்து கார் இன்ஜினை இயக்கிக் காண்பித்தனர். நிகழ்ச்சியில், மெட்ரிக் பள்ளிகளின் ஆய்வாளர் திருவளர்ச்செல்வி, மயிலாடுதுறை மாவட்ட கல்வி அலுவலர் சக்திவேல், தரங்கம்பாடி தாசில்தார் சூரியமூர்த்தி, தனி தாசில்தார் பாலச்சந்திரன், செம்பனார்கோவில்

வட்டார வளர்ச்சி அலுவலர் கிருஷ்ணசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு, மாணவியரின் கண்டுபிடிப்பை பாராட்டினர்.

தினகரன்

**பருத்தி ஏற்றுமதி விரைவில் குறையும்**

பதிவு செய்த நாள் : 12/12/2011 4:57:02 AM



புதுடெல்லி: பல்வேறு நாடுகளில் தேவை குறைவு காரணமாக நம்நாட்டின் பருத்தி ஏற்றுமதி டிசம்பர் மத்தியில் குறையும் என்று அமெரிக்க விவசாய துறை (யுஎஸ்டிஏ) தெரிவித்துள்ளது. பருத்தி நுகர்வு நாடுகள் குறிப்பாக சீனாவில் அதற்கான தேவை குறைய வாய்ப்புள்ளது. அதிலும், 2012 தொடக்கம் முதல் சீனாவில் பருத்தி உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, இந்திய பருத்திக்கான தேவை குறையும். இதை கருத்தில் கொண்டு நடப்பு 2011&12 (அக்டோபர்&செப்டம்பர்) சீசனில் இந்தியாவின் பருத்தி இறக்குமதியை 5 லட்சம் பேல் குறைத்து, 75 லட்சமாக்கப்பட்டு உள்ளது. கடந்த 2010&11ல் இந்தியாவின் பருத்தி இறக்குமதி 60 லட்சம் பேலாக இருந்தது. மேலும் நடப்பு சீசனில் இந்தியாவின் பருத்தி உற்பத்தியிலும் (3.5 கோடி பேல்) மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று யுஎஸ்டிஏ தெரிவித்துள்ளது.

**குன்னூர் ஏல மையத்தில் ரூ.1.75 கோடி டீத்தூள் தேக்கம்**

பதிவு செய்த நாள் : 12/12/2011 4:56:20 AM



குன்னூர் : குன்னூர் சிடிடிஏ தேயிலை தூள் ஏல மையத்தில், இந்தாண்டுக்கான 49வது ஏலம் கடந்த வியாழன், வெள்ளி கிழமைகளில் நடைபெற்றது. மொத்தம் 14.23 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 10.35 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.88 லட்சம் கிலோவும் அடங்கும். இதில் பாகிஸ்தான், ரஷ்யா நாடுகளை சேர்ந்த வர்த்தகர்கள் பங்கேற்றனர். எனினும், வர்த்தகம் சூடுபிடிக்கவில்லை.

உள்நாட்டு வர்த்தகமும் சுமாராகவே இருந்தது. ரூ.1.75 கோடி மதிப்பிலான 21 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. எனினும் விலை ரூ.4 வரை உயர்ந்தது. இலை ரகத்தில் சாதாரண வகை கிலோவுக்கு ரூ.43 முதல் ரூ.48 வரை, உயர் வகை ரூ.80 முதல் ரூ.133, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.44 முதல் ரூ.49 வரை, உயர் வகை ரூ.85 முதல் ரூ.138 வரை விலை கிடைத்தது. சிடிசி டஸ்ட் ரகத்திற்கு அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.141, ஆர்தோடக்ஸ் ரகத்திற்கு ரூ.183ம் விலை கிடைத்தது. அடுத்த ஏலத்திற்கு 13.99 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

## கேரளா பொய்யான தகவலை பரப்புகிறது முல்லைப் பெரியாறு அணை 100 சதவீதம் உறுதியாக இருக்கிறது பொதுப்பணித்துறை முன்னாள் என்ஜினீயர் தகவல்

*கோவை,டிச.12–*

*முல்லைப்பெரியாறு அணை 100 சதவீதம் உறுதியாக இருக்கிறது. கேரளா பொய்யான தகவலை பரப்பி வருவதாக தமிழக முன்னாள் பொதுப்பணித்துறை என்ஜினீயர் திருக்குறளரசு கூறினார்.*

*முல்லைப்பெரியாறு சி.டி.*

*முல்லைப்பெரியாறு அணையின் உறுதித்தன்மை குறித்து தமிழக முன்னாள் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தயாரித்துள்ள சி.டி.கேசட்டுகளின் வெளியீட்டு விழா கோவை ம.தி.மு.க. அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.*

*இந்த நிகழ்ச்சிக்கு ம.தி.மு.க. புறநகர் மாவட்ட செயலாளர் ஈசுவரன், மாநகர் மாவட்ட செயலாளர் ஆர்.ஆர்.மோகன்குமார் தலைமை தாங்கினார்கள். தமிழக பொதுப்பணித்துறை முன்னாள் என்ஜினீயர் திருக்குறளரசு வெளியிட கொங்குபேரவை சங்கர், வணிகர் சங்க பேரவை முத்துராஜ், கோப்மா சங்கத்தை சேர்ந்த பேச்சிமுத்து ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.*

*முல்லைப்பெரியாறு அணையின் உறுதி தன்மை குறித்த முழு விவரங்கள் அடங்கிய இந்த சி.டி. படம் 45 நிமிடம் திரையிடப்பட்டது. பின்னர் என்ஜினீயர் திருக்குறளரசு பேசும்போது கூறியதாவது:–*

*உறுதியாக உள்ளது*

*முல்லைப்பெரியாறு அணை 100 சதவீதம் உறுதியாக உள்ளது. அணைப்பகுதியில் ரூ.18 கோடி செலவில் புனரமைப்பு பணிகளும் நடைபெற்று இருப்பதால் கூடுதல் பலம் பெற்றுள்ளது. ஆனால் கேரள அரசு இந்த அணை குறித்து பொய்யான தகவலை பரப்புகிறது. அணை உடைந்தால் தமிழக மக்களும் பாதிக்கப்படுவார்கள் என்று கூறுகிறார்கள். அணை உடைந்தால், இடுக்கி அணையில்தான் தண்ணீர் போய் சேரும். மேலும் தமிழக பகுதி உயர்ந்த இடத்தில்தான் உள்ளது. தமிழக மக்களும் பாதிக்கப்படமாட்டார்கள். கேரள மாநிலம் முழுவதுமே பூகம்ப தாக்குதல் பகுதியாக இருக்கும்போது, முல்லைப்பெரியாறு அணை பகுதி மட்டும் உடைந்து விடும் என்பது ஏற்புடையது அல்ல.*

*இடுக்கி அணையில் இருந்து 768 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய கேரளா இலக்கு நிர்ணயித்து இருந்தது. ஆனால் இடுக்கி அணையில் இருந்து 270 மெகாவாட்தான் மின்உற்பத்தி*

நடைபெறுகிறது. இதனால் முல்லைப்பெரியாறு அணைமீது கண் வைக்கிறார்கள். இந்த அணையை உடைத்துவிட்டு புதிய அணை கட்டப்போவதாக கூறுகிறார்கள். ஆனால் புதிய அணை கட்டுவார்கள் என்பது சந்தேகமே. சுப்ரீம் கோர்ட்டும், மத்திய அரசும் தமிழ்நாட்டுக்கு சாதகமாக இருக்கும் என்று நம்புவோம்.

இவ்வாறு திருக்குறளரசு கூறினார்.

பின்னர் ம.தி.மு.க. புறநகர் மாவட்ட செயலாளர் ஈசுவரன் கூறியதாவது:–

முல்லைப்பெரியாறு அணை குறித்து கேரளாவின் பொய் பிரசாரத்தை நிறுத்த வலியுறுத்தும் வகையில் கோவை, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள கேரள எல்லைப்பகுதிகளான கே.ஜி.சாவடி, கோபாலபுரம்(பொள்ளாச்சி), நடுப்புனி, வலந்தாயமரம், வேலந்தாவளம், ஆனைக்கட்டி, உடுமலை செக்போஸ்ட் பகுதி ஆகிய இடங்களில் வருகிற 21–ந்தேதி மறியல் போராட்டம் நடைபெறும். கேரளாவுக்கு செல்லும் வாகனங்களும், கேரளாவில் இருந்து வரும் வாகனங்களும் தடுத்து நிறுத்தப்படும். மேலும் தமிழக பொதுப்பணித்துறை என்ஜினீயர்கள் தயாரித்துள்ள சி.டி.க்கள் கேரள எல்லைப்பகுதியில் உள்ள தமிழர்கள் மூலமாக கேரளாவில் வினியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்

இவ்வாறு ஈசுவரன் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் என்ஜினீயர் ராமச்சந்திரன், சூலூர் பொன்னுசாமி, வே.க.ராமசாமி, ராமகிருஷ்ணன், கணபதி செல்வராஜ், ராமசாமி, சூரிநந்தகோபால், டி.என்.ராஜேந்திரன், கருணாநிதி, கதிரவன், பெரியார் திராவிடர் கழக பொதுச்செயலாளர் கு.ராமகிருஷ்ணன் வணிகர் சங்க பேரவையை சேர்ந்த அபிபுல்லா, ஓசை கணேஷ் உள்பட திரளானவர்கள் கலந்து கொண்டனர்.